தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

05.12.2012 P.M

06.12.2012 A.M

## சம்பா பயிரைக் காப்பாற்ற ரூ.69 கோடியில் 10 அம்ச திட்டங்கள் : ஜெயலலிதா



தமிழகத்தில் சம்பா பயிர்களைக் காப்பாற்ற 10 அம்ச திட்டத்தை முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். இந்தத் திட்டங்கள் ரூ.69.88 கோடியில் செயல்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து புதன்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு:

காவிரிப் பிரச்னையில் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு ஓரளவு ஆறுதல் அளிப்பதாக இருந்தாலும், இந்தத் தண்ணீரை வைத்து சம்பா பயிரை முற்றிலும் காப்பாற்ற இயலாது என்பதால், சம்பா பயிர்களை காப்பாற்றுவதற்கான வேறு வழிமுறைகள் குறித்து ஆராய தலைமைச் செயலகத்தில் எனது தலைமையில் புதன்கிழமை ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் விவரம்:

சம்பா பயிரைக் காப்பாற்ற டெல்டா பகுதிகளில் உள்ள மின்சார பம்பு செட்டுகளை இயக்கி நிலத்தடி நீரைப் பயன்படுத்துவது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு டெல்டா விவசாயிகளுக்கு கடந்த 29-ம் தேதி முதல் பகலில் 6 மணி நேரமும், இரவில் 6 மணி நேரமும் என

ஒரு நாளைக்கு 12 மணி நேரத்துக்கு மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த மும்முனை மின்சாரம் பிப்ரவரி வரை வழங்கப்படும்.

இதேபோன்று, டெல்டா பகுதிகளில் உள்ள சுமார் 32 ஆயிரம் டீசல் பம்ப் செட்டுகளை பயன்படுத்தி மேற்பரப்பில் உள்ள நீரினை விவசாய நிலங்களுக்கு எடுத்துச் செல்லும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் டீசல் மானியமாக ஏக்கருக்கு ரூ.600 நிதியுதவி வழங்கப்படும். இதற்கென ரூ.15 கோடி நிதி ஒதுக்கப்படும்.

பிரதான வாய்க்கால்களில் இருந்து விவசாய நிலங்களுக்கு தண்ணீர் செல்லும்போது ஏற்படும் நீர் இழப்பை தவிர்க்கும் வகையில், ஒவ்வொரு அலகிலும் 180 மீட்டர் நீளமுள்ள எச்டிஎப்இ பைப்புகள் வாங்குவதற்காக 100 சதவீத மானியம் வழங்கப்படும். அலகுக்கு ரூ.20 ஆயிரம் வீதம் 6 ஆயிரம் அலகுகளுக்கு இந்த மானியம் அளிக்கப்படும். இதற்கென ரூ.12 கோடி ஒதுக்கப்படும்.

ஒவ்வொரு அலகிலும் 100 மீட்டர் நீளமுள்ள வளையக்கூடிய குழாய்கள் வாங்குவதற்காக 100 சதவீத மானியம் வழங்கப்படும். அலகுக்கு ரூ.2,800 வீதம் 6 ஆயிரம் அலகுகளுக்கு இந்த மானியம் அளிக்கப்படும். இதற்கென ரூ.1.68 கோடி ஒதுக்கப்படும்.

உலர்ந்து போகும் நிலையில் உள்ள பயிர்களைக் காப்பாற்றும் வகையில் 300 பல்வகை நீர்த் தெளிப்பான்கள், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், வேளாண் அறிவியல் நிலையம் மூலம் வாங்கப்படும். இதற்கென ரூ.1.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இந்தப் பணிகள் வேளாண்மைத் துறை மூலம் மேற்கொள்ளப்படும்.

7 முதல் 10 நாள்கள் வரை வறட்சியைத் தாங்கக் கூடிய வகையில், எம்.ஓ.பி. உரம் போன்றவற்றை பயிர்கள் மீது தெளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கென ரூ.4 கோடி நிதி ஒதுக்கப்படும். தண்ணீரின் தேவையைக் குறைக்கும் வகையில் 500 சிறிய நடமாடும் தெளிப்பான்கள் ரூ.2.25 கோடியில் வாங்கப்படும். இதுகுறித்து விவசாயிகளிடையே எடுத்துரைக்க விழிப்புணர்வு முகாம்கள் ரூ.75 லட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக வேலைவாய்ப்பை இழந்துள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் போதிய வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பயிர் இழப்பு ஏற்படும் விவசாயிகளுக்கு தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் மற்றும் திருத்தப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இழப்பீடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்போதுள்ள அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, காப்பீட்டுத் திட்டங்களுக்கான காவிரி டெல்டா விவசாயிகள் செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டணத்தை அரசே செலுத்தும். இதற்கு சுமார் ரூ.30 கோடி செலவு ஏற்படும்.

பயிர் இழப்பு ஏற்பட்டால் காப்பீட்டுத் திட்டங்களின் மூலம் ஏக்கருக்கு ரூ.8 ஆயிரத்து 692 நிவாரணம் வழங்கப்படும். இது தவிர்த்து, மாநில பேரிடர் நிவராண நிதியில் இருந்தும் இப்போது நெற்பயிருக்கு ஏக்கருக்கு ரூ.4 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகை ரூ.5 ஆயிரமாக உயர்த்தப்படும்.

எனவே, காப்பீட்டுத் திட்டங்கள் மற்றும் மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்து பயிரிழப்பு ஏற்படும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.13 ஆயிரத்து 692 வரை நிவாரணம் வழங்கப்படும்.

தமிழக அரசின் இந்தத் தொகுப்பு நடவடிக்கைகளுக்கு என ரூ.69.88 கோடி செலவு ஏற்படும் என முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்

## மேட்டூரிலிருந்து பாசனத்துக்கு 10,000 கன அடி நீர் திறப்பு

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்குத் திறக்கப்படும் நீரின் அளவு புதன்கிழமை இரவு 10 மணியளவில் வினாடிக்கு 10 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

புதன்கிழமை இரவு 7 மணியளவில் அணையிலிருந்து 4 ஆயிரம் கன அடியாக திறக்கப்பட்ட தண்ணீரின் அளவு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு, இரவு 10 மணியளவில் 10 ஆயிரம் கன அடியாகத் திறக்கப்பட்டது.

புதன்கிழமை மாலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 50.95 அடியாக இருந்தது. நீர் வரத்து வினாடிக்கு 3,158 கன அடியாக இருந்தது. நீர் இருப்பு 18.41 டிஎம்சியாக உள்ளது.

## மீன் வளத்தைப் பெருக்க ரூ.100 கோடி நிதி : முதல்வர் ஜெய லலிதா



தமிழகத்தில் மீன் வளத்தைப் பெருக்குவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்கு ரூ.100 கோடி நிதி ஒதுக்கி முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

மேலும், சென்னை தீவுத் திடலில் மீன் உணவுத் திருவிழா நடத்துவதற்கும் ரூ.1 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் அறிவித்தார்.

இது குறித்து தமிழக அரசு புதன்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

தமிழகத்தில் கடல் மீன் உற்பத்தி 4.25 லட்சம் டன்னாகும். மாநிலத்திலிருந்து ரூ.2 கோடி மதிப்புள்ள கடல் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மீன் வளத்தை மேம்படுத்தவும், மீன்வளத்தைப் பெருக்குவதில், நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி அதன்மூலம் மீனவர்களின் வருவாய் மேம்பாடு அடையச் செய்வதற்கும், மீன்வளக் கல்வியை ஊக்குவிப்பது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு நாகப்பட்டினம் தாலுகா பனங்குடி மற்றும் நாகூர் முட்டம் கிராமங்களில் 85 ஏக்கர் நிலப்பரப்பில் மீன்வளப் பல்கலைக்கழகம் அமைக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

மேலும், உள்நாட்டு மீன் உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கும், இப்போதுள்ள உள்நாட்டு நீர்வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி மீன்பிடிப்பை அதிகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக, நவீன வசதிகளுடன்கூடிய மீன் விதைப் பண்ணைகள் ரூ.37 கோடி மதிப்பில், ஈரோடு மாவட்டம் பவானிசாகர், கரூர் மாவட்டம் திருக்கம்புலியூர், திருச்சி மாவட்டம் அசூர், புதுக்கோட்டை மாவட்டம் தட்டமனைப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம் அகரப்பேட்டை, நெய்தலூர், தட்டான்குளம், விழுப்புரம் மாவட்டம் வீடூர் அணை, காஞ்சிபுரம் மாவட்டம் வாணியஞ்சாவடி, திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு, கடலூர் மாவட்டம் லால்பேட்டை ஆகிய 11 இடங்களில் அமைக்கப்படும்.

மீன் இறங்கு தளங்கள்: காஞ்சிபுரம் மாவட்டம் கடப்பாக்கம், கடலூர் மாவட்டம் சாமியார்பேட்டை, நாகப்பட்டினம் மாவட்டம் செருதூர், புதுக்கோட்டை மாவட்டம் முத்துக்கூடா, ராமநாதபுரம் மாவட்டம் தேவிபட்டினம், ரோச்மாநகர், தூத்துக்குடி மாவட்டம் தருவைகுளம், திரேஸ்புரம், கன்னியாகுமரி மாவட்டம் இனயம்புத்தன்துறை, சைமன் காலனி, குரும்பனை ஆகிய 11 இடங்களில் ரூ.63 கோடி செலவில் மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்படும்.

சுகாதாரமான முறையில் மீன்களை கையாள்வதற்கு ஏற்றவாறு ஏலக்கூடம், வலை பின்னும் கூடம், மீன் உலர்தளம், உட்புற சாலை, தெரு விளக்கு, தண்ணீர் வசதி, கழிவுநீர் வடிகால் ஆகிய வசதிகளுடன் இந்த இறங்கு தளங்கள் அமைக்கப்படும்.

மீன் உணவுத் திருவிழா: மீன் வளர்ப்பு, மீன் உற்பத்தி, மீன் உணவின் முக்கியத்துவம், மீனில் இருந்து தயாரிக்கப்படும் உணவு வகைகள் ஆகியன குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மீன் உணவுத் திருவிழா இந்த ஆண்டு சென்னை தீவுத் திடலில் மூன்று முதல் நான்கு நாள்கள் நடத்தப்படும். இந்த விழாவை நடத்துவதற்கு ரூ.1 கோடி நிதி ஒதுக்கி முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இந்தத் திருவிழாவில் தேசிய அளவிலான மீன் வளர்ப்பு சார்ந்த நிறுவனங்கள், மீன் உணவு தயாரிப்பில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், மீன் தீவனம் தயாரித்து விற்பனை செய்யும் நிறுவனங்கள், வண்ண மீன் உற்பத்தி நிறுவனங்கள் ஆகிய அனைத்து நிறுவனங்களும் கலந்து கொள்ளும் என்று தமிழக அரசின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காவிரியில் இருந்து தமிழகத்துக்கு தண்ணீர் : கர்நாடக விவசாய சங்கங்கள் எதிர்ப்பு

காவிரியில் இருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிட கர்நாடக விவசாய சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதோடு, வியாழக்கிழமை (டிச.6) முதல் போராட்டம் நடத்தப்போவதாகவும் அறிவித்துள்ளது.

காவிரியில் இருந்து புதன்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடி நீரை 5 நாள்களுக்கு திறந்துவிடுமாறு கர்நாடக அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதற்கு கர்நாடகத்தில் பரவலாக எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இதுகுறித்து காவிரி பாதுகாப்பு அமைப்பு தலைவர் ஜி.மாதே கெப்டா கூறியது: தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிட முடியாது. தினமும் வினாடிக்கு 10 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்துவிட உச்ச நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவு உண்மை நிலைக்கு எதிரானது.

உச்ச நீதிமன்றத் தீர்ப்புப்படி, தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிடக் கூடாது. நீதிமன்ற அவமதிப்புக்கு பயந்து தண்ணீர் திறந்துவிட அரசு முடிவெடுத்தால், அதை எதிர்த்து வியாழக்கிழமை முதல் போராட்டம் நடத்துவோம் என்றார் அவர்.

பாரத விவசாயிகள் கூட்டமைப்புத் தலைவர் நரசிம்மப்பா கூறியது: தமிழகத்துக்கு இந்த முறை தண்ணீர் திறந்துவிட நேர்ந்தால், அடுத்தாண்டு ஜூன் மாதம் வரை தண்ணீர் திறந்துவிட உத்தரவிடமாட்டோம் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்றார் அவர்.

கர்நாடக மாநில விவசாயிகள் சங்கத் தலைவர் புட்டனையா கூறியது: கர்நாடகத்தில் இருந்து ஒரு சொட்டு தண்ணீர் தமிழகத்துக்கு சென்றாலும், இங்குள்ள விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள்.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒருதலைப்பட்சமானது என்றார்.

இதை போன்று கர்நாடகத்தில் பல்வேறு அமைப்புகளும் எதிப்புத் தெரிவித்துள்ளன.

சாலை மறியல்: தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிடுமாறு உச்ச நீதிமன்றம் புதன்கிழமை பிறப்பித்த தீர்ப்பை எதிர்த்து மண்டியா மாவட்டம், மத்தூர் வட்டாரம், கெஜ்ஜலகெரே கிராமத்தில் பெங்களூர் - மைசூர் நெடுஞ்சாலையில் அமர்ந்து காவிரி பாதுகாப்பு அமைப்பு தலைவர் மாதே கெப்டா தலைமையில் விவசாயிகள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**காவிரி : 10,000 கன அடி நீர் திறக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு**



தமிழகத்துக்கு புதன்கிழமை (டிசம்பர் 5) முதல் ஞாயிற்றுக்கிழமை (டிசம்பர் 9) வரை விநாடிக்கு 10 ஆயிரம் கன அடி நீரைத் திறந்துவிட கர்நாடகத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இரு மாநிலங்களில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களுக்கு எவ்வளவு தண்ணீர் தேவை என்பது குறித்து முடிவு செய்ய வியாழக்கிழமை (டிசம்பர் 6) அல்லது வெள்ளிக்கிழமை (டிசம்பர் 7) கூடும்படி காவிரி கண்காணிப்புக் குழுவுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி உத்தரவை அரசிதழில் வெளியிடாததற்குக் கண்டனம் தெரிவித்த நீதிபதிகள், அதற்கு எத்தனை நாள்கள் ஆகும் என்பது குறித்தும் பதில் அளிக்க மத்திய

அரசுக்கு உத்தரவிட்டனர். காவிரி தொடர்பான வழக்கு விசாரணை நீதிபதிகள் டி.கே. ஜெயின், மதன் பி. லோகுர் அடங்கிய அமர்வு முன்பு மூன்றாவது நாளாக புதன்கிழமை நடைபெற்றது.

தமிழகம் வாதம்: அப்போது, தமிழகத்தின் சார்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் சி.எஸ். வைத்தியநாதன், ""காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி உத்தரவு 2007-ம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்டது. அதை அரசிதழில் வெளியிட தமிழகம் வலியுறுத்தி வருகிறது.

நடுவர்மன்றத்துக்கு காலியாக உள்ள தலைவர் பதவி இதுவரை நிரப்பப்படவில்லை. தண்ணீர் கோரி தமிழகம் காவிரி ஆணையம், காவிரி கண்காணிப்புக் குழு ஆகியவற்றிடம் முறையிட்டுத் தண்ணீர் கிடைக்காததால் தற்போது உச்ச நீதிமன்றத்தை அணுகியுள்ளது" என்று கூறினார்.

அரசிதழில் இறுதி உத்தரவு: அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள் ""காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி உத்தரவு அரசிதழில் வெளியிட தடை கோரி சம்பந்தப்பட்ட மாநிலங்கள் வழக்கு தொடர்ந்துள்ளனவா" என்று கேட்டனர்.

அதற்கு ""அரசிதழில் வெளியிட வேண்டும் என்பதைத்தான் நாங்களும் வலியுறுத்தி வருகிறோம்" என்று நீதிமன்றத்தில் ஆஜரான தமிழகம், கர்நாடகம், புதுச்சேரி ஆகிய மாநில அரசுகளின் வழக்குரைஞர்கள் தெரிவித்தனர்.

அதற்கு பதிலளித்த மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஹரேன் ராவல், ""நடுவர்மன்றத்தின் இறுதி உத்தரவில் குறிப்பிட்டுள்ள அம்சங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து சம்பந்தப்பட்ட மாநிலங்கள் நடுவர் மன்றத்திடம் முறையிட்டுள்ளன.

நிலுவை வழக்கு காரணமா? அதே கோரிக்கையை முன்வைத்து உச்ச நீதிமன்றத்திலும் மனு தாக்கல் செய்துள்ளன. நீதிமன்றத்தில் இந்த வழக்குகள் முடிவடைந்த பின்னர் அரசிதழில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

இதையடுத்து பேசிய நீதிபதி டி.கே. ஜெயின், ""நடுவர்மன்ற உத்தரவை உடனடியாக செயல்படுத்த வேண்டியது அரசின் கடமை. நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதைக் காரணமாகக் கூறுவது அர்த்தமற்றது; அரசிதழில் வெளியிட சம்பந்தப்பட்ட மாநிலங்கள் தடை கோரவில்லை.

இந்த விவகாரத்தில் விரிவான ஆய்வு செய்யப்பட்டு இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகும் இடைக்கால உத்தரவின் அடிப்படையில்தான் இப்போதும் தீர்வு காணப்பட்டு வருகிறது. இதனால் நீதிமன்றத்தின் நேரமும் வீணடிக்கப்படுகிறது" என்று தெரிவித்தார்.

கர்நாடகம் வாதம்: இதையடுத்து கர்நாடகத்தின் சார்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் அனில் திவான் கூறியது:

""தமிழகத்தின் வறட்சியைக் கணக்கிட்டே காவிரி கண்காணிப்புக் குழு, காவிரி ஆணையம் ஆகியன அவ்வப்போது தண்ணீரைத் திறந்துவிட கர்நாடகத்துக்கு உத்தரவிடுகின்றன.

கர்நாடகத்தின் கள நிலைமை, இக்கட்டான சூழ்நிலை, தொழில்நுட்பப் பிரச்னை ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு உத்தரவுகள் பிறப்பிக்கப்படுவதில்லை. எந்த அடிப்படையில் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்பது குறித்து நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டும்.

குறைந்தபட்சம், தொழில்நுட்ப நிபுணர்களின் ஆய்வை அடிப்படையாக வைத்து தண்ணீர் திறந்து விடுவது குறித்து முடிவு எடுக்க வேண்டும்" என்று அனில் திவான் கூறினார்.

அப்போது குறிக்கிட்ட நீதிபதிகள் ""நடப்பு டிசம்பர் மாதத்துக்கு 6.12 டிஎம்சி நீர் திறந்துவிட காவிரி கண்காணிப்புக் குழு கர்நாடகத்துக்கு உத்தரவிட்டுள்ளது. அதை அடிப்படையாக வைத்து 10 டிஎம்சி நீரை கர்நாடகம் திறந்துவிடலாம் என்று கூறினர்.

தமிழகத்துக்கு 3000 கன அடி நீர்: அதை ஏற்க மறுத்த கர்நாடக அரசு வழக்குரைஞர் அனில் திவான் ""காவிரி கண்காணிப்புக் குழு கூடி தற்போதைய நிலைமையை ஆய்வு செய்து அளிக்கும் உத்தரவுக்கு கர்நாடகம் கட்டுப்படும். தற்போதும் தமிழகத்துக்கு சுமார் 3 ஆயிரம் கன அடி நீர் சென்று கொண்டிருக்கிறது" என்றார்.

இதையடுத்து பேசிய தமிழக அரசின் வழக்குரைஞர் வைத்தியநாதன், ""காவிரி கண்காணிப்புக் குழுக் கூட்டத்தின் தேதி அறிவிக்கப்படவில்லை. கர்நாடகம் வழங்கி வரும் 3 ஆயிரம் கன அடி நீரைக் கொண்டு பாசனத்துக்காக மேட்டூர் அணையைத் திறக்க இயலாது. சுமார் 10 ஆயிரம் கன அடி நீராவது தேவை" என்று வேண்டுகோள் விடுத்தார்.

இதை ஏற்று நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு: ""காவிரி கண்காணிப்புக் குழு வியாழக்கிழமை (டிசம்பர் 6) அல்லது வெள்ளிக்கிழமை (டிசம்பர் 7) கூட வேண்டும்.

தமிழகத்தில் பயிரிடப்பட்டுள்ள சம்பா பயிர்களுக்குத் தேவையான நீரின் அளவு குறித்தும், கர்நாடகத்தில் பயிரிடப்பட்டுள்ள பாசனப் பகுதிகளுக்கு வரும் நாள்களில் தேவையான நீரின் அளவு குறித்தும் அக்குழு முடிவு செய்ய வேண்டும்.

தமிழகத்துக்கு புதன்கிழமைமுதல் ஞாயிற்றுக்கிழமை (டிசம்பர் 9) வரை பில்லிகுண்டுவை கணக்கிட்டு விநாடிக்கு 10 ஆயிரம் கன அடி நீர் தண்ணீரை கர்நாடகம் திறக்க வேண்டும்.

கண்காணிப்புக் குழு எடுக்கும் முடிவை திங்கள்கிழமை (டிசம்பர் 10) நடைபெறும் விசாரணையின்போது நீதிமன்றத்தில் அறிக்கையாக மத்திய அரசு தாக்கல் செய்ய வேண்டும்.

2007 பிப்ரவரியில் பிறப்பிக்கப்பட்ட காவிரி நடுவர்மன்றத்தின் இறுதி உத்தரவை ஏன் இதுவரை அரசிதழில் பிறப்பிக்கவில்லை, அரசிதழில் வெளியிட எத்தனை நாள்கள் ஆகும் என்பது குறித்து மத்திய அரசு பதில் அளிக்க வேண்டும்" என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இதையடுத்து இந்த வழக்கின் விசாரணையை திங்கள்கிழமைக்கு ஒத்திவைத்தனர்.

கர்நாடகம் திறந்து விடும் தண்ணீர் மூலம் தமிழகத்துக்கு சுமார் 4 டி.எம்.சி. நீர் கிடைக்கும் என தெரிகிறது.

**தமிழகமும், கர்நாடகமும் இரு கண்கள் போன்றவை: நீதிபதி**

புதன்கிழமை நடைபெற்ற விசாரணையின்போது பேசிய கர்நாடக வழக்குரைஞர் அனில் திவான் ""கர்நாடகத்தில் பயிர்கள் வாடுவதை எங்கள் கண்களால் பார்த்து கொண்டு எப்படி சும்மா இருக்க முடியும்?" என்றார்.

அதற்கு நீதிபதி டி.கே. ஜெயின், ""இரு மாநிலத்திலும் வறட்சி உள்ளது. ஒரு கண்ணில் கர்நாடக விவசாயிகளின் பிரச்னையை பார்க்கும் நீங்கள், மறு கண்ணில் தமிழக விவசாயிகளின் பிரச்னையையும் பாருங்கள்" என்றார்.

இதேபோல் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஹரேன் ராவலிடம் பேசிய நீதிபதிகள் ""காவிரி நடுவர்மன்றத்தின் இறுதி உத்தரவை அரசிதழில் வெளியிடுவது குறித்து நீங்கள்தான் மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும்" என்று நீதிபதி டி.கே. ஜெயின் கூறினார்.

அதற்கு பதிலளித்த ஹரேன் ராவல், ""நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கில் தீர்ப்பு வந்த பிறகே அரசிதழில் நடுவர்மன்ற உத்தரவை வெளியிடுவது குறித்து முடிவு செய்ய முடியும் என்ற பதிலைத்தான் எங்களால் பெற முடிந்துள்ளது" என்றார்.

05th dec 2012 P.M

**நவீன வேளாண் கருவிகள் பயன்பாடு குறித்த பயிற்சி முகாம்**

திண்டுக்கல் மாவட்டம், பழனி உபகோட்ட வேளாண் பொறியியல் துறை சார்பில், வேடசந்தூர் வட்டம் வடமதுரையில், அட்மா திட்டத்தில் மழைநீர் சேகரிப்பு மற்றும் நவீன வேளாண் கருவிகளின் பயன்பாடு குறித்த பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

வேளாண் நிலங்களில் மழைநீரை சேகரிக்க சமஉயர வரப்பு அமைத்தல், ஓடைகளில் பெரிய தடுப்பணை அமைத்தல், கசிவு நீர்க்குட்டை அமைத்தல், பண்ணைக் குட்டை அமைத்தல் மூலம் கிணறுகளில் நீர்மட்டம் எவ்வாறு உயருகிறது என்பது குறித்து விளக்கப்பட்டது.

தொடர்ந்து, நவீன வேளாண் இயந்திரங்களை பயன்படுத்தி, விவசாய உற்பத்தியைப் பெருக்கும் வழிமுறைகள், விவசாய வேலைக்கு ஆள்கள் கிடைக்காத நிலையில் வேளாண் கருவிகளை விவசாயிகளே பயன்படுத்துவது குறித்த செயல்முறை விளக்கமும் செய்து காண்பிக்கப்பட்டது. இந்த முகாமில், சுமார் 60 விவசாயிகள் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சிக்கு, வடமதுரை பேரூராட்சித் தலைவி பாப்பாத்தி முத்துக்கிருஷ்ணன் தலைமை வகித்தார். வேளாண் உதவிப் பொறியாளர் ரத்தினசபாபதி வரவேற்றார்.

காந்திகிராம வேளாண்மை அறிவியல் மைய தொழில்நுட்ப அலுவலர் ஏ. உதயகுமார், இளநிலைப் பொறியாளர் முனியப்பன், கால்நடை மருத்துவர் எஸ். ரவிசங்கர், அட்மா திட்ட துணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி, உதவிச் செயற்பொறியாளர் எம். ராமசாமி, உதவிப் பொறியாளர் ஏ. குமணவேல், உதவி வேளாண் இயக்குநர் அ. ராணி ஆகியோர் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை, உதவிப் பொறியாளர் ரத்தினசபாபதி செய்திருந்தார்.

**விவசாயிகளுக்கு மானியத்துடன் வேளாண் கருவிகள் வாங்க ரூ. 85 லட்சம் ஒதுக்கீடு**

விருதுநகர் மாவட்டத்தில் மானியத்துடன் வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்கு விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்களை வேளாண்மை பொறியியல் கூட்டுறவு சங்கம் வரவேற்கிறது.

விருதுநகர் மாவட்டத்தில், விவசாயிகளுக்கு பல்வேறு நவீன சாதனங்கள் மானியத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது. அதற்காக தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் ரூ.85.10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது விவசாய பணிகளுக்கு ஆள்கள் கிடைக்காத நிலையில் நவீன இயந்திரங்கள் மூலம் தான் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிலும் குறிப்பிட்ட நேரத்தில் அனைவரும் பணிகளை மேற்கொள்வதால் வேளாண் பொறியியல் கூட்டுறவு சங்கத்தில் டிராக்டர் மற்றும் நெல் பயிரிடும் நவீன இயந்திரம் ஆகியவை கிடைக்காத நிலை இருக்கிறது. விவசாயிகளுக்கு பல்வேறு நவீன சாதனங்கள் மானியத்தில் வழங்கப்பட உள்ளன.

பல்பயிர் கதிரடிக்கும் இயந்திரம், மக்காச்சோளம் கதிரடிக்கும் இயந்திரம், களையெடுக்கும் கருவி, விசைத்தெளிப்பான், நெல் நடவு செய்யும் இயந்திரம், டிராக்டர் பவர் டிரில்லர், உழவுடன் பார் அணைக்கும் வசதியுடன் கூடிய டிராக்டர், மரம் வெட்டும் கருவி, பண்ணைக் கழிவுகளை தூளாக்கும் கருவி, மாட்டுத் தீவனம் வெட்டும் கருவி, உள்ளிட்டவைகள் சிறு, குறு விவசாயிகளுக்கு மானியத்தில் விநியோகம் செய்யப்பட இருக்கிறது. எனவே இக்கருவிகளை மானியத்தில் வாங்க விரும்பும் ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, சிவகாசி, வெம்பக்கோட்டை, மற்றும் சாத்தூர் வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் உதவி செயற்பொறியாளர் (வேளாணமை பொறியியல்) ஸ்ரீவில்லிபுத்தூர் அலுவலகத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

அருப்புக்கோட்டை, திருச்சுழி, நரிக்குடி, காரியாபட்டி மற்றும் விருதுநகர் வட்டார பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் உதவி செயற்பொறியாளர் (வேளாணமை பொறியியல்) விருதுநகர் அலுவலகத்திற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும். விண்ணப்பத்துடன் புகைப்படம், தங்கள் விளைநிலத்தின் சிட்டா அடங்கல், குடும்ப அட்டை நகல் மற்றும் ஆதிதிராவிடர்களாக இருந்தால் சாதிச்சான்று உள்ளிட்டவைகளை இணைத்து அனுப்பி வைக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் டி.என்.ஹரிஹரன் தெரிவித்துள்ளார்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் : 50.55 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 50.55 அடியாக இருந்தது.

அணைக்கு வினாடிக்கு 4,315 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 1,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து காவிரி, வெண்ணாற்றில் வினாடிக்கு தலா 101 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணைக் கால்வாய், கொள்ளிடத்தில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

தினமலர்

06.12.2012 A.M

## வெள்ளை எள் சாகுபடி பட்லூரில் தீவிரம்

ஈரோடு: பட்லூர் பகுதி மானாவாரி நிலங்களில் விவசாயிகள் அதிகளவில் வெள்ளை எள் சாகுபடியில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

ஈரோடு மாவட்டம், வெள்ளித்திருப்பூர் அருகே பட்லூர் உள்ளது. விவசாய நிலங்கள் அதிகமுள்ள இப்பகுதி விவசாயிகள், வாழை, எள் அதிளவில் சாகுபடி செய்துள்ளனர்.

பெண் விவசாயி ஈஸ்வரி கூறியதாவது:

எள்ளில் வெள்ளை எள், கறுப்பு எள் என இருரகம் உள்ளது. மானாவாரி நிலங்களில் அதிகளவு எள் சாகுபடி செய்யப்படுகிறது. ஏக்கருக்கு மூன்று கிலோ எள் தெளித்தால், 400 கிலோ மகசூல் கிடைக்கும். டி.ஏ.பி., அடியுரமாகவும், மேலுரமாக யூரியா தெளிக்க வேண்டும். மார்க்கெட்டில் ஒரு கிலோ எள், 94 ரூபாய்க்கு விலைபோகிறது.

எள் பயிரை அறுவடை செய்யும் முன், செடியின் கீழ் பகுதியிலுள்ள இலைகள் பழுத்து மஞ்சளாக மாறி, 25 சதவீத இலைகள் உதிர்ந்து விடும். எள் காய்கள் பாதியளவு மஞ்சள் நிறமடைந்து விட வேண்டும். எள் பயிரின் கீழ் பகுதியிலிருந்து, 10வது காயை உடைத்து பார்த்தால், விதைகள் கறுப்பு எள்ளாக இருந்தால், கறுப்பாகவும், வெள்ளை எள்ளாக இருந்தால், வெள்ளையாகவும் இருக்க வேண்டும்.

அதிகம் முற்றிவிட்டால், காய்கள் வெடித்து விதைகள் சிதறி சேமடையும். பயிரை அறுத்து தான் எடுக்க வேண்டும். இதனால், எள்ளுடன் மண் கலப்பது தவிர்க்கப்படும். அறுத்தெடுத்த செடியை வட்ட வடிவமாக கால்பகுதி உள்புறம் வருமாறு அடுக்கி வைத்து இரண்டு அல்லது மூன்று நாள் மூடி வைக்க வேண்டும்.

களத்தில் இரண்டு நாள் காயப்போட்டு, வெடித்ததும் எள்ளை பிரித்து எடுக்க வேண்டும்.

விதையில் கலந்துள்ள கல், மண், தூசி, சருகுகள் சுருங்கிய மற்றும் முதிராத பழுதுபட்ட விதைகள் ஆகியவற்றை தனியே பிரித்து எடுக்க வேண்டும். தரம் பிரித்த எள்ளை சுத்தமான சாக்கு பைகளில் நிரப்பி, விற்பனை செய்தால் நல்ல பலன் பெறலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## கறவைமாடு வளர்ப்பு பயிற்சிக்கு அழைப்பு

ஈரோடு: ஈரோட்டில் இலவசமாக கறவைமாடு வளர்ப்பு பயிற்சி, 10ம் தேதி துவங்க உள்ளது. மத்திய அரசின் கிராமப்புற அமைச்சக வழிகாட்டுதலின்படி, கனரா வங்கி ஏற்று நடத்தும் இலவச கறவைமாடு வளர்ப்பு பயிற்சி, ஈரோடு, அசோகபுரம், சரஸ்வதி வித்யாலாயா சிறுவர் பள்ளி

வளாகத்தில், 10ம் தேதி துவங்கி, 15ம் தேதி வரை நடக்கிறது.
விவசாயிகள், இளைஞர்கள், பெண்கள் இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயன் பெறலாம். மேலும், மதிய உணவு உட்பட அனைத்தும் இலவசமாக அளிக்கப்படும். முறையாக பயிற்சி பெற்றவருக்கு, சான்றிதழ் வழங்கப்படும்.
வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ளவருக்கு, முன்னுரிமை அளிக்கப்படும். மேலும், விபரங்களுக்கு, 0424 2290338 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ளலாம், என கனரா வங்கி முதுநிலை மேலாளர் பூபாலன் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகள் இல்லாத கம்பம் உழவர் சந்தை

கம்பம்:விவசாயிகளே இல்லாமல் முழுவதும், வியாபாரிகளின் கட்டுப்பாட்டில் கம்பம் உழவர் சந்தை செயல்படுகிறது.
கடந்த தி.மு.க., ஆட்சியில், தமிழகம் முழுவதும் உழவர் சந்தைகள் துவக்கப்பட்டன. விவசாயிகள் சாகுபடி பொருட்களை, இடைத்தரகர்களின்றி, பொதுமக்களிடம் நேரடியாக விற்பனை செய்வதே, இத்திட்டத்தின் நோக்கம்.பஸ் வசதி, கடை, தராசு உள்ளிட்ட பல வசதிகள் இலவசமாக செய்து தரப்பட்டது.
மாவட்டத்தில் போடி,பெரியகுளம், தேனி, கம்பத்தில் உழவர் சந்தைகள் அமைக்கப்பட்ட போதும், கம்பம் சந்தையே இன்று வரை, அதிக காய்கறிகளை விற்பனை செய்கிறது. கம்பம் பகுதி மட்டுமின்றி கேரளாவை சேர்ந்தவர்களும், இங்கு காய்கறிகள் வாங்கிச் செல்கின்றனர்.
நல்ல முறையில் செயல்பட்டாலும், சந்தைக்குள் கடை வைத்திருப்பவர்களில் ஒருவர் கூட விவசாயி இல்லை.முழுவதும் வியாபாரிகள் மட்டுமே உள்ளனர். அதிகாரிகளும் வேறு வழியின்றி,ஆட்சேபனை தெரிவிக்காமல் உள்ளனர். விவசாயிகள் பெயரில்,வியாபாரிகள் கடை வைத்துள்ளதே இதற்கு காரணம்.
விலை நிர்ணயம், வியாபாரிகளின் கண் அசைவை பார்த்தே நிர்ணயம் செய்யப்படுகிறது. இட நெருக்கடியில், சிக்கித் தவித்தாலும், முழுக்க முழுக்க வியாபாரிகளின் பிடியில் கம்பம் உழவர் சந்தை உள்ளது.
வேளாண் விற்பனை குழு அதிகாரிகள், கம்பம் உழவர் சந்தையை கண்காணிக்க வேண்டும்.

## பருத்தியில் புழுக்கள் தாக்கம் கட்டுப்படுத்த ஆலோசனை

போடி:பருத்தியில் தாக்கியுள்ள புழுக்களை கட்டுப்படுத்துவது குறித்து, விவசாயிகளுக்கு போடி விவசாய உதவி இயக்குநர் ஆலோசனை வழங்கியுள்ளார்.
போடியில் விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம், போடி வட்டார விவசாய உதவி இயக்குநர் சுருளிமுத்து தலைமையில் நடந்தது.
விவசாய ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் ரங்கநாயகி முன்னிலை வகித்தார். போடி பகுதியில் 750 ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

பருத்தியில் ஆங்காங்கே தண்டு மூக்கு வண்டு, மோதிரப்புழுவின் தாக்குதலுக்கான அறிகுறிகள் உள்ளன.
பூப்பூக்கும், காய்ப்பிடிக்கும் போது, கார்போபியூரான் 3 சதவீதம் குருணை மருந்தை ஏக்கருக்கு 12 கிலோ வீதம், செடியின் அடிப்பாகத்தில் இட்டு மண் அணைக்க வேண்டும். அல்லது, குளோபைரிபாஸ் மருந்தை, 1 லிட்டர் தண்ணீருக்கு 2 மி.லி., வீதம் தண்டு பாகம் நனையும் படி ஊற்ற வேண்டும். சாம்பல் நிற கூன்வண்டு தென்பட்டால் வேம்பு கலந்த மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3 மிலி வீதம் கலந்து தெளிப்பதால் கட்டுப்படுத்தலாம், என தெரிவித்தனர்.

**மழையை நம்பிய ராமநாதபுரம் விவசாயிகள் வடிக்கும் கண்ணீர் மகசூலை காப்பாற்றுமா**

ராமநாதபுரம்:ராமநாதபுரம் மாவட்டத்தில் பெய்யாத மழையால் விவசாயிகள் ஏமாற்றத்தில் உள்ளனர். "தண்ணீருக்காக வடிக்கும் கண்ணீர், வருணனை மனமிறங்க வைத்து, பயிர் நனையுமா' என்ற ஏக்கத்தில் உள்ளனர்.
மாவட்டத்தில், ஒரு லட்சத்து 28 ஆயிரம் எக்டேரில் நெல்(110 நாள் அறுவடை ரகங்கள்) சாகுபடி நடந்து வருகிறது.
மழையை நம்பி நடவு செய்த பயிர், மகசூல் பருவத்தை எட்டியுள்ளது. பொதுப்பணித்துறை சார்பில் பல கோடி ரூபாயில் "பராமரிக்கப்பட்டும்?' பல கண்மாய்கள் வறண்டு கிடக்கின்றன. பயிரை காப்பாற்ற பாதாளத்தில் உள்ள கண்மாய் நீரை, "பம்ப் செட்' மூலம் பாய்ச்சுகின்றனர்.போதிய தண்ணீரின்றி ஆயிரக்கணக்கான எக்டேர் பயிர்கள் கருகி வருகின்றன.
ராமநாதபுரம் பெரிய கண்மாய் நீரினை பயன்படுத்துவோர் சங்க தலைவர் பாலகிருஷ்ணன் கூறியதாவது: இந்த கண்மாயை நம்பி, 200 ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இதில் தேங்கிய தண்ணீர், 20 நாட்களுக்கு மட்டும் பயன்படும். மேலும், 40 நாட்களுக்கு தண்ணீர் தேவை. மழை பெய்தால் தான், பயிரை காப்பற்ற முடியும், என்றார்.
வேளாண் இணை இயக்குனர் சக்தி மோகன் கூறியதாவது: கடந்தாண்டு நவம்பரில் 334 மி.மீ., மழை பெய்தது. இந்தாண்டு 56 மி.மீ., மட்டுமே பெய்துள்ளது. சில நாட்களாக பெய்யும் மழை, கடலை சாகுபடிக்கு மட்டுமே உகந்தது, என்றார்.

**கரும்பு சாகுபடித்திட்டம் கலெக்டர் ஆய்வு**

சிவகங்கை:""நடப்பாண்டு, 347 எக்டேரில் நீடித்த நிலையான கரும்பு சாகுபடி திட்டம் செயல்படுத்த உள்ளதாக,'' கலெக்டர் ராஜாராமன் தெரிவித்தார்.
சிவகங்கை அருகே கவுரிபட்டி, மேலக்காடு கிராமங்களில் கரும்பு சாகுபடி முறையினை கலெக்டர் ஆய்வு செய்தார்.
அவர் கூறுகையில்,"" நடப்பாண்டு 347 எக்டேரில் நீடித்த நிலையான கரும்பு சாகுபடி திட்டம் செயல்படுத்தப்படும். நீரில் கரையும் உரங்களுக்கு, எக்டேருக்கு ரூ.21 ஆயிரம், சொட்டு நீர்

பாசனத்திற்கு 75 சதவீத மானியம் வழங்கப்படும், என்றார்.
விவசாய இணை இயக்குனர் செல்லத்துரை, காளையார்கோவில் உதவி இயக்குனர் ஜெயசீலன் டேவிட் பங்கேற்றனர்.

## மழையால் ஏரிகளுக்கு நீர்வரத்து துவக்கம்

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் மாவட்டத்தில், கடந்த இரண்டு நாட்களாக, மழை பெய்து வருவதால், ஏரிகளுக்கு நீர் வரத்து துவங்கியுள்ளது. மதுராந்தகம் ஏரி நிரம்பி வழிகிறது. இருப்பினும், பாசனத்திற்கு பயன்படும் பெரிய ஏரிகள் இன்னும் நிறையவில்லை.
காஞ்சிபுரம் மாவட்டத்தில், இந்தாண்டு போதிய மழை இல்லை. இதனால், ஏரிகள் நிரம்பவில்லை. இச்சூழலில் வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள, குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, காஞ்சிபுரம் மாவட்டத்தில், கடந்த இரண்டு நாட்களாக மழை பெய்தது.
நேற்று காலை 7:00 மணி நிலவரப்படி, உத்திரமேரூரில் 4.7 செ.மீ., மழை பதிவானது. மற்ற பகுதிகளில் போதிய மழை இல்லை. கடந்த இரண்டு நாட்களாக பெய்த மழை காரணமாக, ஏரிகளுக்கு ஓரளவு நீர் வந்துள்ளது. காஞ்சிபுரம் மாவட்ட பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் 1,009 ஏரிகள் உள்ளன.
இவற்றில், 912 ஏரிகள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளன. இவற்றில், 52 ஏரிகள் நிரம்பியுள்ளன. 70 ஏரிகளில் 75 சதவீதம் தண்ணீர், 406 ஏரிகளில் 50 சதவீதம் தண்ணீர், 384 ஏரிகளில் 50 சதவீதத்திற்கும் குறைவாக தண்ணீர் உள்ளது. பெரிய ஏரிகளில் நேற்று வரை எதுவும் நிரம்பவில்லை.
நிரம்பியது
காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பெரிய ஏரிகளில் முக்கியமானது மதுராந்தகம் ஏரி. இதன் மொத்தக்கொள்ளளவு 609 மில்லியன் கன அடி, ஆழம் 21.3 அடி. ஐந்து மதகுகள் உள்ளன. ஏரி நீரை பயன்படுத்தி, 2,853 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் நடைபெறுகிறது.
மதுராந்தகம், கருங்குழி,மாம்பாக்கம், சதனூர் உட்பட, 18 கிராமங்களில் ஏரி நீரை நம்பி விவசாயம் நடக்கிறது.
ஏரியிலிருந்து வெளியேறும் உபரி நீர் கால்வாய் மூலம், மதுராந்தகம், செய்யூர் பகுதிக்குட்பட்ட 30 ஏரிகளுக்கு நீர் செல்கிறது. இதன் மூலம், 4,608 ஏக்கர் நஞ்சை நிலம் பாசன வசதி பெறுகிறது. தற்போது ஏரி முழு கொள்ளவு நிரம்பி வழிகிறது. ஏரிக்கு வினாடிக்கு, 600 கடி அடி நீர் வந்துகொண்டிருக்கிறது. 200 கன அடி நீர் வெளியேறுகிறது.

## சிக்கல் !சொட்டு நீர் பாசன திட்டத்தில் விவசாயிகள் பயன் பெறுவதில் ...தோட்டக்கலை அலுவலர்கள் பற்றாக்குறையே காரணம்

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் மாவட்டத்தில், தோட்டக்கலை அலுவலர் பணியிடங்கள் காலியாக இருப்பதால், தோட்டக்கலை பயிர் திட்டங்கள் குறித்து, விவரங்களை தெரிந்து கொள்ள

முடியாமல், விவசாயிகள் பரிதவித்து வருகின்றனர்.

காலி பணியிடங்கள்

மாவட்டத்தில், 13 வேளாண்மை விரிவாக்க மையங்கள் உள்ளன. இவற்றில், வேளாண்மை மற்றும் தோட்டக்கலை என, இரு பிரிவுகள் செயல்படுகிறன. தோட்டக்கலை பிரிவில், ஒரு உதவி இயக்குனர், ஒரு அலுவலர் மற்றும் நான்கு உதவியாளர்கள் வரை பணியிடங்கள் அனுமதிக்கப் பட்டு உள்ளன.

இவற்றில், திருப்போரூர், உத்திரமேரூர், அச்சரப்பாக்கம், சித்தாமூர் உள்ளிட்ட ஆறு தோட்டக்கலை உதவி இயக்குனர் பணியிடங்கள், கடந்த ஓராண்டாக காலியாக உள்ளன.

இவை தவிர, இரண்டு தோட்டக்கலை பண்ணைகளில்,மேலாளர் பணியிடங்கள் மற்றும் இரண்டு உதவியாளர்கள் என, மொத்தம் 10 பணியிடங்கள் நிரப்பப்படவில்லை.

"பயன்பெற முடியவில்லை'

காலி பணியிடங்கள் நீண்ட நாட்களாக நிரப்பப்படாமல் உள்ளது குறித்து, விவசாயிகள் கூறியதாவது:

சொட்டு நீர் பாசனம் அமைக்க வேண்டும் என்றால், ஆரம்ப கட்டம் முதல் அனைத்து செயல்பாடுகள் வரையில், தோட்டக் கலை துறை அதிகாரிகளின் உதவிகள் தேவை.

சொட்டு நீர் பாசன திட்டத்திற்கு, அரசு வழங்கும் மானியம் கிடைக்கச் செய்வதற்கு, தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் மற்றும் அலுவலர் கண்டிப்பாக, தோட்டக்கலை விரிவாக்க மையங்களில், இருக்க வேண்டும். தற்போது, இந்த பணியிடங்கள் காலியாக இருப்பதால், சொட்டு நீர் பாசன திட்டத்தில் விவசாயிகளால் பயன்பெற முடியவில்லை.

இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

இதுகுறித்து தோட்டக்கலை துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ""சில உதவி இயக்குனர் பணியிடங்கள் காலியாக உள்ளன. அதை ஈடுகட்ட அருகில் உள்ள அதிகாரிகளை கூடுதல் பொறுப்பாக அந்த பணிகளை கவனிக்க அறிவுறுத்தப் பட்டு உள்ளது. இருப்பினும், ஊழியர்களை நியமிக்க அரசு தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்," என, தெரிவித்தார்.

## நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பூண்டி ஏரி நீர்மட்டம் உயர்வு

ஊத்துக்கோட்டை:நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக, பூண்டி ஏரிக்கு, நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தின் பல பகுதிகளில், இரு தினங்களாக, தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் ஏரி, குளங்களுக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

சென்னை மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும், முக்கிய ஏரியான பூண்டி ஏரியின் நீர்வரத்துப் பகுதியில், பெய்து வரும் பலத்த மழை காரணமாக, நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

நேற்று காலை, 6:00 மணி நிலவரப்படி, ஏரிக்கு மழைநீர் வினாடிக்கு, 1,536 கன அடி, கிருஷ்ணா

நதிநீர், 258 கன அடி என, 1,794 கன அடி நீர் வருகிறது. தற்போதைய ஏரியின் நீர்மட்டம், 26.45 அடி. ஏரியில், 1,056 மில்லியன் கன அடி நீர் உள்ளது.
ஏரியில் இருந்து, இணைப்பு கால்வாய் மற்றும் பேபி கால்வாய் வழியாக வினாடிக்கு, 170 கன அடி நீர், புழலேரிக்கு திறந்த விடப் பட்டு உள்ளது.

## மழை , பனியால் பூக்கள் விளைச்சல் குறைவு : விவசாயிகள் கவலை

பள்ளிப்பட்டு:தொடர் மழை மற்றும் பனிமூட்டம் காரணமாக மல்லிப் பூ, சாமந்திப்பூ ஆகியவற்றின் விளைச்சல் குறைந்து உள்ளது.
பள்ளிப்பட்டு அடுத்த புண்ணியம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில். மொத்தம், 12 ஏக்கர் நிலத்தில் அதிக அளவில் மல்லிப்பூ வகையும், குறைந்த அளவில் மற்ற பூக்களும் மகசூல் செய்யப்படுகிறது.
இவற்றை விவசாயிகள் தினமும் பறித்து, சென்னை கோயம்பேடு மற்றும் பாரிமுனைப் பகுதிகளில் உள்ள மொத்த வியாபாரிகளிடம் விற்பனை செய்து வருகின்றனர்.
பருவ மழையை தொடர்ந்து, பனி மூட்டம் மற்றும் தற்போது பெய்து வரும் தொடர் மழை காரணமாக பூக்களின் விளைச்சல் குறைந்து உள்ளது. இதன் காரணமாக, மல்லிப்பூ ஒரு கிலோ, 750 ரூபாய் முதல், 900 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:நல்ல மகசூல் கிடைத்தால் ஒரு ஏக்கருக்கு, 30 முதல், 35 கிலோ பூக்கள் கிடைக்கும். இதற்கு, அடி உரம், பூச்சிக்கொல்லி மருந்து செலவு, பூக்களை பறிக்கும் கூலி ஆட்கள் செலவு மற்றும் சென்னைக்கு ரயிலில் எடுத்து செல்லும் செலவு என, மொத்தம் ஏக்கருக்கு, 12 ஆயிரம் ரூபாய் செலவாகிறது.ஆண்டிற்கு மூன்று பருவங்களில் ஒரு பருவத்தில் மாதத்திற்கு, 4,000 ரூபாய் வரை வருமானம் கிடைக்கிறது. இது குடும்ப செலவிற்கு பற்றவில்லை. எனவே, மற்ற பயிர்களுக்கு வழங்கப்படுவது போல, அரசு மான்யத்தில் உரம், விதை மற்றும் பூச்சி மருந்து கிடைத்தால் எங்களின் வருமானம் உயரும்.இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

## ஏரிகள் நிரம்பாததால் விவசாயிகள் கலக்கம் !

விழுப்புரம்: விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அணைக்கட்டுகள் மற்றும் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட ஏரிகள் நிரம்பாததால், நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். இந்தாண்டு ஜூலை மாதத்தில் துவங்க வேண்டிய தென்மேற்கு பருவமழை கால தாமதமாக துவங்கியும், போதுமான அளவு மழை பெய்யவில்லை. இதனால் மானாவாரி மணிலா, பயறு வகை சாகுபடி மற்றும் சம்பா போக நெல் நடவு உள்ளிட்ட விவசாயப் பரப்பளவு கணிசமான அளவு குறைந்தது. அதனை தொடர்ந்து வட கிழக்கு பருவமழை அக்டோபர் முதல் வாரத்தில் துவங்கியது. இருப்பினும் துவக்கத்தில் சில நாட்கள் மட்டுமே அவ்வப்போது சிறிதளவு மழை பெய்தாலும், தொடர் கனமழை இல்லாத காரணத்தாலும் ஏரிகள் மற்றும் அணைக்கட்டுகளில் போதிய நீர் வரத்து இல்லை.

இந்நிலையில் நீலம் புயல் காரணமாக இரண்டு நாட்கள் மட்டும் மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. இதனால் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள அணைகள் மற்றும் ஏரிகளில் ஓரளவிற்கு தண்ணீர் மட்டம் உயர்ந்தது. அதன் பின் பருவ மழை பெய்யாமல், கோடை காலம் போல் வெயில் காய்ந்தது. இருப்பினும் விவசாயிகள் கார்த்திகை மாதம் 1ம் தேதி மற்றும் கார்த்திகை தீபத்திற்கு மழை பெய்யும் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். மழை சிறிதளவு கூட பெய்யாமல் போனதால் விவசாயிகள் கவலை அடைந்தனர். இருப்பினும் நீலம் புயல் காரணமாக பெய்த மழை நீரைப் பயன்படுத்தி விவசாயிகள் பல இடங்களில் நெல் நடவிற்கு நாற்று விடும் பணியில் ஈடுபட்டனர். அதனை தொடர்ந்து ஏரிகளில் தேங்கியிருந்த தண்ணீரைப் பயன்படுத்தி நடவு பணிகளையும் நிறைவு செய்து வருகின்றனர்.இந்நிலையில் விழுப்புரம் மாவட்டத்தில் வழக்கமாக ஆயிரத்து 60 மி.மீ அளவு மழை பெய்வது வழக்கம். இந்தாண்டு இதுவரை 820 மி.மீ., மட்டுமே மழை பெய்துள்ளது.

இதனால் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள கோமுகி அணை, மணிமுக்தா அணை மற்றும் வீடூர் அணை போன்றவற்றில் தண்ணீர் வரத்து குறைந்தது. மாவட்டம் முழுவதும் பொதுப் பணித் துறையின் கீழ் 825 பெரிய ஏரிகள் உள்ளன. இதில் 325 ஏரிகளில் மட்டும் 50 சதவீதத்திற்கு மேல் நீர் நிரம்பியுள்ளது. 500 ஏரிகளில் 50 சதவீதத்திற்கு குறைவாகவே தண்ணீர் உள்ளது. இதேபோல் 300க்கும் மேற்பட்ட சிறிய ஏரிகள் தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடக்கிறது. தமிழகத்தின் மொத்த தானிய உற்பத்தியில் 15 சதவீதம் விளைவிக்கப்படும், விழுப்புரம் மாவட்டத்தில் பருவமழை பொய்த்து, அணைகள் மற்றும் ஏரிகள் நிரம்பாமல் உள்ளது. இதனால் இந்தாண்டு உணவு தானியங்கள் சாகுபடி செய்யும் பரப்பளவும் 40 சதவீதம் வரை குறைந்துள்ளது. இதனால் மாவட்டத்தில் உணவு தானிய உற்பத்தி குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தில் பரவலாக பயிரிடப்பட்டுள்ள நெல், மணிலா மற்றும் பயறு வகைகள் தண்ணீரின்றி கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. பல ஆயிரம் ரூபாய் செலவு செய்து சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தண்ணீர் பற்றாக்குறையால் கலக்கம் அடைந்துள்ளனர்.

## தர்பூசணி சாகுபடி குறித்து சிறுவாடியில் கருத்தரங்கம்

விழுப்புரம்: தர்பூசணி சாகுபடி குறித்த கருத்தரங்கம் சிறுவாடியில் நடந்தது. தர்ப்பூசணி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கான சிறப்பு பயிற்சி மற்றும் கருத்தரங்கம் சிறுவாடி கிராமத்தில் நடந்தது. விழுப்புரம் காவியா அக்ரி கிளினிக், பெங்களூரு ஜெய்சன் சீட்ஸ் மற்றும் தோட்டக்கலை துறை இணைந்து பயிற்சி முகாமை நடத்தியது. சிந்தூரி தர்பூசணி நிறுவன நிர்வாக இயக்குனர் ராஜசேகர் தலைமை தாங்கினார். சசிகுமார் வரவேற்றார். தோட்டக்கலை உதவி இயக்குனர் சுமதி, தர்பூசணி சாகுபடியில் உரமிடும் முறை மற்றும் தோட்டக்கலை துறை மூலம் விவசாயிகளுக்கு அரசு வழங்கும் மான்ய திட்டங்கள் குறித்து பேசினார். காவியா அக்ரி கிளினிக் உரிமையாளர் தியாகராஜன், நோய் தடுப்பு முறை மற்றும் கூடுதலாக 50 சதவீதம் மகசூல் கிடைக்க விவசாயிகள்

மேற்கொள்ள வேண்டிய வழி முறைகள் குறித்து பயிற்சியளித்தார். மத்திய அரசின் இப்கோ நிறுவன மேலாளர் காஜாமொய்தீன் உயர் தொழில் நுட்பங்கள் குறித்து பேசினார். இதில் கடந்தாண்டு ஏக்கருக்கு 15 டன்னிற்கு மேல் மகசூல் பெற்ற தர்பூசணி சாகுபடி விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கினர். அக்ரி கிளினிக் அலுவலர் மோகன் நன்றி கூறினார்.

## அறுவடைக்கு பின் நேர்த்தி பற்றி செயல்விளக்க கூட்டம்

ஆத்தூர்: ஆத்தூர் லீபஜாரில் உள்ள வேளாண் ஒழுங்குமுறை விற்பனை கூடம் அலுவலகத்தில், விவசாய விளை பொருட்களை அறுவடைக்கு பின், நேர்த்தி செய்வது குறித்து செயல்விளக்க கூட்டம் நடந்தது.

ஆத்தூர் யூனியனுக்கு உட்பட்ட தென்னங்குடிபாளையம், ராமநாயக்கன்பாளையம், அப்பமசமுத்திரம் உள்பட, 20க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

மக்காச்சோளம், நெல், பருத்தி, மஞ்சள், தேங்காய் பருப்பு பதப்படுத்தல், மரவள்ளி, நெல், எள், பருத்தி, நிலக்கடலை பயிர்களை அறுவடை செய்த பின், நேர்த்தி செய்தல் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

வேளாண்த்துறை மூலம், சிறு, குறு விவசாயிகளுக்கு, 100 சதவீதம் சொட்டு நீர் மானியம், பிற விவசாயிகளுக்கு, 75 சதவீதம் சொட்டு நீர் மானியம், தெளிப்பு நீருக்கு, 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. டி.ஏ.பி., உயிர் உரம், நுண்ணுட்ட சத்து, உயிரியியல் பயிர் பாதுகாப்பு மருந்துகளுக்கு, 50 சதவீதம் மானியமும், கைத் தெளிப்பான் மற்றும் விசைத் தெளிப்பானுக்கு, தலா 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது, என தெரிவிக்கப்பட்டது.

இதில், கோவை மண்டல வேளாண் வணிகத்துறை, உதவி இயக்குனர் அல்தாப், ஆத்தூர் ஒழுங்கு முறை விற்பனை கூட கண்காணிப்பாளர் சேரலாதன், வேளாண் வணிகத்துறை அலுவலர் கைலாசம், வேளாண் அலுவலர் ஜானகி, அலுவலர்கள் சுப்ரமணி, ரவிக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

வெள்ளை காகத்தை பாதுகாக்கும் மக்கள்

பெத்தநாயக்கன்பாளையம்: பெத்தநாயக்கன்பாளையம் அருகே, கருமந்துறையில் உலா வரும் காக்கை கூட்டத்தில் அதிசயிக்கும் வகையில், வெள்ளை நிற காகம் ஒன்று உள்ளது. அந்த வெள்ளை காகத்தை வனத்துறையினர் பாதுகாத்து வருகின்றனர்.

பறவை மற்றும் விலங்குகளில் மாறுப்பட்ட தோற்றமும், நிறம் கொண்ட உயிரினங்கள் அவ்வப்போது காணப்படும், மரபணு தடுமாற்றத்தால் ஏற்படும் அத்தகைய மாற்றத்தை, அதிசயமாக கருதி வியப்புடன் மக்கள் பார்த்து வருகின்றனர்.

காகம் என்றாலே கறுப்பு நிறமாகத்தான் இருக்கும். இல்லாத ஒன்றை இருப்பதாக கூறும் போது, "வெள்ளை காக்கை மல்லாக்க பறக்குது' என கிராமப்புற மக்கள் வேடிக்கையாக குறிப்பிடுவர். அதை மெய்யாக்கும் வகையில், சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம், சின்னக் கல்வராயன்மலை, வடக்கு நாடு பஞ்சாயத்து, கருமந்துறை பகுதியில் உள்ள பெருமாள் கோவில் வளாகத்தில் வளர்ந்துள்ள ஒரு மரத்தில், வெள்ளை நிறத்தில் அதிசய காகம் உள்ளது. கறுப்பு காகங்கள், வெள்ளை காகத்தை கூட்டத்தில் சேர்த்து கொள்வதில்லை.

அரிய வகை வெள்ளை காகத்துக்கு, கருமந்துறை பகுதி மக்கள் உணவு கொடுத்து, யாரும் வேட்டையாடாமல் பாதுகாத்து வருகின்றனர்.

இது குறித்து, கருமந்துறை பகுதி மலைவாழ் மக்கள் கூறியதாவது:

வெள்ளை நிறத்தில் உள்ள காகத்தை, கொக்கு என நினைத்தோம். காகத்தின் குரலில் கரைவதால் தான், வெள்ளை நிறத்தில் காகம் இருப்பது தெரிந்தது.

நாள்தோறும் காலை, 7 மணி முதல், 10 மணி வரை, பெருமாள் கோவில் வளாகத்தின் மரங்களில் இருந்து வரும் வெள்ளை காகத்துக்கு, உணவு கொடுத்து, பாதுகாத்து வருகிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## மழைப்பொழிவின்மையால் மரவள்ளி அறுவடை செய்ய முடியாத பரிதாபம் : விவசாயிகள் கண்ணீர்

நாமக்கல்: போதிய மழைப்பொழிவு மற்றும் மின்சாரமும் இல்லாததால், திருச்செங்கோடு அதன் சுற்றுவட்டாரத்தில் நடவு செய்யப்பட்ட மரவள்ளியை விவசாயிகள் அறுவடை செய்ய முடியாத பரிதாபம் அரகேறியுள்ளது.

திருச்செங்கோடு அதன் சுற்றுவட்டாரத்தில் கணிசமான ஏக்கர் பரப்பளவில் மரவள்ளி கிழங்கு விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. பத்து மாத பயிரான மரவள்ளிக்கு இரு வாரத்திற்கு, ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும். இந்நிலையில் இந்தாண்டு பரவலாக எதிர்பார்த்த மழைப்பொழிவு இல்லை.

அதன்காரணமாக திருச்செங்கோடு அதன் சுற்றுவட்டாரத்தில் நூற்றுக் கணக்கான ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்ட மரவள்ளி அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பல ஆயிரம் ரூபாய் செலவு செய்து நடவு செய்யப்பட்ட மரவள்ளி, ஆடு, மாடுகளுக்கு தீவனமாக போடும் பரிதாபத்திற்கும் விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து திருச்செங்கோடு ஆண்டிப்பாளையத்தை சேர்ந்த விவசாயி முத்துசாமி கூறியதாவது:

திருச்செங்கோடு சுற்றுவட்டாரத்தில் கணிசமான அளவு மரவள்ளி விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. பத்து மாதத்தில் மரவள்ளியை அறுவடை செய்ய இயலும். ஒரு ஏக்கர் மரவள்ளி நடவு செய்ய, 40 ஆயிரம் ரூபாய் வரை செலவு பிடிக்கும்.

இந்தாண்டு துவக்கத்தில் திருச்செங்கோடு சுற்றுவட்டாரத்தில் மரவள்ளி நடவு செய்யப்பட்டது. அறுவடை சமயத்தில் மழைப்பொழிவு இல்லை. அதனால் மரவள்ளி பயிரிடப்பட்ட விளைநிலம் அனைத்தும் இறுகிய நிலையில் உள்ளது. இச்சமயத்தில் மரவள்ளியை பிடுங்க இயலாது. லேசான ஈரப்பதம் இருந்தால் மட்டுமே எளிதில் பிடுங்க இயலும்.

மழைப்பொழிவின்மை இதற்கு முக்கிய காரணமாகும். தவிர, கிணற்று மோட்டாரில் தண்ணீர் எடுத்து விடும் அளவிற்கு மின்சாரம் இருப்பதில்லை. இப்பிரச்னை காரணமாக ஆண்டிபாளையம் சுற்றுவட்டாரத்தில் நடவு செய்யப்பட்ட மரவள்ளியை அறுவடை செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது.

ஒரு ஏக்கரில் நடவு செய்யப்பட்ட மரவள்ளி மூலம் மட்டும் ஒரு லட்சம் ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டுள்ளது. பயிரிடப்பட்ட மரவள்ளி செடி ஆடு, மாடுகளுக்கு தீவனமாக அளிக்கப்படுகிறது என்றார்.

## ஆவின் பால் பாக்கெட்டுகளில் குறியீடு முறை விரைவில் அமல் : நிர்வாகம் முடிவு

கோவை : ஆவின் பால் பொருட்கள் விரைவில் கெட்டுவிடுவதாக அடிக்கடி புகார்கள் எழுவதையடுத்து, பால் பாக்கெட்டுகளில் குறியீடுமுறையை அமல்படுத்தவும், விற்பனையை அதிகரிக்க ஆவின் அலுவலகங்கள் துவங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆவின் பால் நிறுவனத்துக்கு கோவை, திருப்பூர் மாவட்டத்திலுள்ள 638 பால் உற்பத்தியாளர் சொசைட்டியிலிருந்து, நாள்தோறும் 2.50 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இது குளிரூட்டும் நிலையத்தில் பதப்படுத்தப்பட்டு மாவட்ட முழுவதும் சப்ளை செய்யப்படுகிறது. மொத்தமுள்ள 583 பூத்களில் ஒரு லட்சத்து 41 ஆயிரம் லிட்டர் நாள்தோறும் விற்பனை செய்யப்படுகிறது.

கோவைக்கு மட்டும் 1.25 லட்சம் லிட்டரும், திருப்பூருக்கு 15 ஆயிரம் லிட்டரும் விற்பனை செய்யப்படும் நிலையில் கடந்த சில மாதங்களாக பால் அடிக்கடி கெட்டுவிடுவதாக புகார்கள் எழுந்துள்ளன. இப்பிரச்னையால், ஆவின் பாலை தவிர்த்து, தனியார் பால் உணவுப்பொருட்களை மக்கள் விரும்ப துவங்கியுள்ளனர்.

இதுபோன்ற பின்னடைவிலிருந்து மீளவும், பிரச்னைகளை சமாளிக்கவும் புதிய நடைமுறைகளை கொண்டுவர நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து, ஆவின் "பூத்' விற்பனையாளர்கள் கூறியதாவது:

ஆவின் பால் விரைவில் கெட்டுவிடுவதாக பொதுமக்கள் அடிக்கடி புகார் தெரிவித்து வருகின்றனர். கடந்த மாதம் 22ம் தேதி முதல் 25ம் தேதி வரை மாவட்டம் முழுவதும் பல்லாயிரம் லிட்டர் பால் கெட்டுப்போய் உள்ளது.

இதுதொடர்பாக மக்கள் தரப்பில் அதிக புகார்கள் எழுந்தன. தரமான பாலை விரும்பும் மக்கள், தற்போது ஆவின் பாலை விரும்புவதில்லை. முதலிடத்தில் இருந்த ஆவினின் நிலை தற்போது

படிப்படியாக மாறி வருகிறது.
பாலை சரியாக பதப்படுத்தாததும், சரியாக குளிரூட்டாததுமே இதற்கு காரணம். சில மாதங்களுக்கு முன் நாளொன்றுக்கு ஒரு லட்சத்து 80 ஆயிரம் லிட்டர் விற்பனையான பால், தற்போது ஒரு லட்சத்து 40 ஆயிரம் லிட்டர் மட்டுமே விற்பனையாகிறது. நாளொன்றுக்கு எட்டரை லட்சம் ரூபாய்க்கு விற்பனையான பால், தற்போது ஏழு லட்சத்துக்கு குறைவாகவே விற்பனையாகிறது.
கெட்டுப்போன பாலின் அளவை குறிப்பிட்டு, பணத்தை திரும்பி செலுத்த பலமுறை கடிதம் அளித்துள்ளோம். ஆனால், இதுவரை பணம் வந்ததில்லை; எங்களுக்கு நஷ்டம் ஏற்படுவதுடன், பொது மக்களின் குற்றச்சாட்டுகளால் மனக்கஷ்டத்துக்கு ஆளாகிறோம். இப்பிரச்னைக்கு அரசு, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு, விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.
ஆவின் பொது மேலாளர் சிராஜ் கூறியதாவது:
நாள்தோறும் 6-8 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் அனைத்து "பூத்'களுக்கும் பால் அனுப்பிவைக்கப்படுகிறது. மின்வெட்டு, ஜெனரேட்டர் இயக்கம் உள்ளிட்ட காரணங்களால் பால் வெப்பநிலையில் மாறுதல் ஏற்படலாம். வெப்பநிலையை சரியான முறையில் பராமரிக்கமால் சில பால் "பூத்'கள் விற்பனை செய்கின்றன; இதனால், புகார்களுக்கு உள்ளா
கின்றன.
சென்னைக்கு பால் தேவைப்பட்டதால், இங்கு பால் விற்பனையை 1.41 லட்சம் லிட்டராக நிர்ணயிக்கப்பட்டது. தற்போது, சென்னையில் பால் உற்பத்தி உபரியாக உள்ளதால், கோவையில் 1.75 லட்சம் லிட்டர் வரை விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.
சில பால் பூத்களில் மீதமாகும் பாலை காலதாமதமாக விற்பனை செய்வதாலும், பால் கெட்டு விடுவதாக புகார் வருகிறது. இவற்றை தவிர்க்க பால் பாக்கெட்டுகளில் குறியீடு முறை அமல்படுத்தப்படவுள்ளது.
இதன்படி காலை விற்பனைக்கு "எம்' என்றும், மாலை விற்பனைக்கு "இ' என்ற எழுத்தும் பாக்கெட்டில் அச்சிடவும், அதிக விற்பனையுள்ள இடங்களில் இரவு வரை விற்பனைசெய்ய, ஆவின் அலுவலகங்கள் துவங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.
கடந்த மாதம் நடந்த சம்பவத்தையடுத்து "பூத்' விற்பனையாளர்களுக்கு இதுவரை 6,200 லிட்டர் வரை
"ரீபண்ட்' தொகை அளிக்கப்பட்டுள்ளது.
பூத்களில் பாலின் தரம் அறியவும், தனியார் பால் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றதா என்பதை நாள்தோறும் கண்காணிக்க தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு, அவர் கூறினார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

05.12.2012 P.M

06.12.2012 A.M

**காவிரியில் வினாடிக்கு 10,000 கனஅடி தண்ணீர்தமிழகத்துக்கு திறந்துவிட வேண்டும்**



புதுடெல்லி : சம்பா பயிரை காப்பாற்ற தமிழகத்துக்கு வரும் ஞாயிற்றுக் கிழமை வரை 4 நாட்களுக்கு வினாடிக்கு 10 ஆயிரம் கன அடி வீதம் காவிரியில் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று கர்நாடக அரசுக்கு உச்ச நீதிமன்றம் அவசர உத்தரவு பிறப்பித்துள்ளது. இரு மாநில தண்ணீர் தேவையை தீர்மானிக்க கண்காணிப்பு குழுவை இன்று கூட்ட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் குறுவை சாகுபடியை இழந்த டெல்டா விவசாயிகள் சம்பா சாகுபடியையே நம்பி உள்ளனர். பருவமழை பொய்த்த நிலையில் கர்நாடக அரசும் தமிழகத்துக்கு தண்ணீர் தர முடியாது என்று கை விரித்து விட்டது. உச்சநீதிமன்ற உத்தரவையடுத்து நடந்த இரு மாநில முதல்வர்களின் பேச்சுவார்த்தையாலும் பயனில்லாமல் போனது. இதையடுத்து, சம்பா சாகுபடியைக் காப்பதற்காக காவிரியில் தண்ணீரைத் திறந்து விட வேண்டும் என்று கோரி தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந் தது. இந்த வழக்கு நீதிபதிகள் ஜெயின், மதன் லோகூர் ஆகியோர் முன்னிலையில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

கர்நாடக அரசு சார்பில் ஆஜரான மூத்த வக்கீல் அனில் திவான் வாதிடும்போது, டிசம்பர் 1ம் தேதி முதல் தினமும் சராசரியாக 3500 கன அடி தண்ணீர் தமிழகத்துக்கு திறந்து விடப்பட்டுள்ளது என்றார். தமிழக அரசு சார்பில் ஆஜரான மூத்த வக்கீல் வைத்தியநாதன், 'கர்நாடக அரசு சார்பில்

தவறான தகவல் நீதிமன்றத்துக்கு தரப்பட்டுள்ளது. தமிழகத்தில் பயிரிடப்பட்டுள்ள 14 லட்சம் ஏக்கர் சம்பா நெல்லுக்கு தினமும் குறைந்தது 5 ஆயிரம் கன அடி தண்ணீராவது தேவை. இல்லையென்றால் பயிர்கள் கருகிவிடும். விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள்' என்றார்.

'

இந்த வாதங்களைக் கேட்ட நீதிபதிகள், 'வரும் ஞாயிற்றுக்கிழமை வரை வினாடிக்கு 10 ஆயிரம் கன அடி தண்ணீரை கர்நாடக அரசு திறந்து விட வேண்டும். மேலும், வரும் வெள்ளிக்கிழமை காவிரி கண்காணிப்புக் குழுவை மத்திய நீர்வள அமைச்சகம்  கூட்ட வேண்டும். அந்த கூட்டத்தில் தமிழக அரசும், கர்நாடக அரசும் தங்களுக்கான நீர் தேவை குறித்தும், சாகுபடியான ஏக்கர் குறித்தும் ஆலோசனை செய்து முடிவெடுக்க வேண்டும். கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை அறிக்கையாக வரும் திங்கட்கிழமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்' என்று உத்தரவிட்டனர்.

அரசிதழில் ஏன் வெளியிடவில்லை?

'1991ல் காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவையும் 2006 பிப்ரவரி 5ம் தேதி வெளியிடப்பட்ட இறுதி உத்தரவையும் மத்திய அரசு ஏன் இதுவரை அரசிதழில் வெளியிடவில்லை' என்று நீதிபதிகள் கேட்டனர். அதற்கு  மத்திய அரசு சார்பில் ஆஜரான வக்கீல், 2006 உத்தரவை அரசிதழில் வெளியிடுவது குறித்து மத்திய அரசால் இறுதி முடிவு எடுக்க முடியவில்லை. காரணம் காவிரி நதிநீர் ஆணையத்தின் உத்தரவை எதிர்த்து இரு மாநில அரசுகளும் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளன என்றார். இதை ஏற்காத நீதிபதிகள், நதி நீர் ஆணையத்தின் உத்தரவை அரசிதழில் ஏன் வெளியிடவில்லை என்பது குறித்த அறிக்கையை மத்திய நீர்வளத் துறை தாக்கல் செய்ய வேண்டும்' என்று உத்தரவிட்டனர்.

**பொங்கல் பண்டிகைக்காக ரேஷன் கடைகளுக்கு 31 ஆயிரம் டன் பருப்பு**



சென்னை : கர்நாடகா, மகராஷ்டிரா, குஜராத், மத்திய பிரதேசம், உத்திரபிரதேசம், அரியானா, டெல்லி உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு பருப்பு கொள்முதல் செய்யப்படுகிறது. சில்லரை மார்க்கெட் டில் தற்போது ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.72, தான்சானியா பருப்பு ரூ.62, உளுந் தம் பருப்பு ரூ.58, பர்மா உளுந்தம்பருப்பு ஸீ 48, பாசிப்பருப்பு ரூ.75, பாசிப்பருப்பு 2ம்ரகம் ரூ.65, கடலைப் பருப்பு ரூ.68, கடலைப்பருப்பு 2ம்ரகம் ரூ.63 என்று விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் தமிழக அரசு சார்பில் ரேஷன் கடைகளில் கிலோ ரூ.30க்கு விற்கப்படுகிறது. கார்டுதாரர்களுக்கு குறைந்த அளவே ரேஷன் கடைகளில் பருப்பு வகைகள் வழங்கப்படுவ தால் வெளி மார்க்கெட்டை நாட வேண்டிய கட்டாயம் உள்ளது. இதனால் பருப்பு விலையில் ஏற்ற இறக்கங்கள் உள்ளன.

இந்நிலையில் கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பொதுமக்கள் நலன் கருதி ரேஷன் கடைகளில் கூடுதல் பருப்பு கிடைக்க அரசு ஆவண செய்துள்ளது. இதற்காக பொது விநியோகத்திட்டத்துக்கு 31 ஆயிரம் டன் பருப்பு கொள்முதல் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. இதுகுறித்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மேலாண்மை இயக்குனர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளதாவது:

பொது விநியோகத்திட்டத்தில் சிறப்பு பொது விநியோகத்தின் கீழ் பருப்பு வகைகள் விற்பனை செய்யப்படுகின்றன. வெளி மார்க்கெட்டில் பருப்புகள் விலை அதிகமாக இருப்பதால் மக்கள் நலன் கருதி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் சார்பில் ரேஷன் கடைகளுக்காக பருப்பு கொள்முதல் செய்யப்பட உள்ளது. மொத்தம் 31 ஆயிரம் டன் பருப்பு வகைகள் கொள்முதல் செய்யப்பட உள்ளன. இதன் மதிப்பு ரூ.139 கோடியே 59 லட்சம். இதற்காக பருப்பு உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து டெண்டர்கள் கோரப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட பருப்பு உற்பத்தி நிறுவனம்,

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் போன்ற பெரிய அமைப்புகளுக்கு பருப்பு வகைகளை சப்ளை செய்த அனுபவம் உள்ள நிறுவனமாக இருத்தல் வேண்டும். எந்த நேரமும் 1500 டன் பருப்பு வகைகளை இருப்பில் வைத்திருக்க வேண்டும். அரசின் கருப்பு பட்டியலில் சம்பந்தப்பட்ட நிறுவனம் இடம் பெற்றிருந்தால் டெண்டரில் பங்கேற்க இயலாது. பருப்பு வகைகளை 50 கிலோ மூட்டைகளாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கிடங்குகளில் சம்பந்தப்பட்ட டெண்டர்தாரரே தங்கள் செலவில் கொண்டு வந்து இறக்க வேண்டும். இந்த நிபந்தனைகளுக்குட்பட்ட நிறுவனங்கள் தமிழக அரசின் டெண்டரில் பங்கேற்கலாம்.

## பருத்தி ஏற்று மதி பதிவு வரம்பு 30,000 பேல்களாக உயர்வு



புதுடெல்லி : பருத்தி ஏற்றுமதிக்கான விதிமுறைகள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளன. ஏற்றுமதி பதிவுச் சான்றிதழுக்கான பேல்கள் உச்சவரம்பு 30,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
பருத்தி அறுவடைக் காலம் தொடங்கி உள்ளது. தற்போது பொதுச் சந்தையில் பருத்தியின் விலை, அரசின் ஆதார விலையைவிட அதிகமாகவே உள்ளது. இந்நிலையில், பருத்தி ஏற்றுமதி விதிமுறையை மத்திய அரசு தளர்த்தியுள்ளது. இதுதொடர்பாக வெளிநாட்டு வர்த்தக பொது இயக்குநரகத்தால் வெளியிடப்பட்டுள்ள அரசாணையில் கூறப்பட்டுள்ளதாவது:

தற்போது பதிவுச் சான்றிதழுக்கான பேல்கள் உச்சவரம்பு 10,000 பேல்களாக (ஒரு பேல் 170 கிலோ) இருப்பது, 30,000 பேல்களாக உயர்த்தப்பட்டுள் ளது. இதன்படி, தகுதியானவர்கள் பல பதிவுச் சான்றி தழ்களை பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும் நோக்கில், பதிவுச் சான்றிதழ் முறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. லூதியானா, ராஜ்கோட், விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் உள்ள அலுவலகங்கள் மூலம் ஏற்றுமதியாளர்கள் பதிவுச் சான்றிதழ் கோரி விண்ணப்பிக்கலாம்.

இதுதவிர மேலும் ஒரு புதிய விதிமுறை அறிமுகம் செய்யப்படுகிறது. ஒரு ஏற்றுமதியாளர் 30,000 பேல்கள் அல்லது கடந்த சீசனில் எவ்வளவு ஏற்றுமதி செய்தாரோ அந்த எண்ணிக்கையில் எது குறைவோ அந்த எண்ணிக்கையில் பதிவுச் சான்றிதழுக்கு விண்ணப்பிக்கலாம். அதாவது கடந்த சீசனில் ஒரு ஏற்றுமதியாளர் 3,000 பேல்களை ஏற்றுமதி செய்திருந்தால், அந்த எண்ணிக்கையில் விண்ணப்பிக்கலாம். இதேபோல் புதி தாக ஏற்றுமதி செய்ய வருபவர்கள் 3,000 பேல்களுக்கு விண்ணப்பிக்கலாம். இவ்வாறு அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

**திருப்பூரில் முருங்கை விலை கிலோ ரூ.60**



தாராபுரம் : திருப்பூர் மாவட்டம், தாராபுரம், மூலனூர், பெரமியம், கன்னிவாடி உள்ளிட்ட பகுதிகளில் 20,000 ஏக்கர் பரப்பளவில் முருங்கைக்காய் பயிரிடப்படுகிறது. இப்பகுதிகளில் செடிமுருங்கை, மரம் முருங்கை என 2 வகைகளில் முருங்கைக்காய் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. ஓட்டன் சத்திரம் சந்தைக்கு முருங்கைக்காய்கள் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

தற்போது முருங்கைக்காய் சீசன் முடியும் நேரம். இதனால், ஓட்டன்சத்திரம் சந்தைக்கு முருங்கை வரத்து குறைய துவங்கியது. சபரி மலை சீசனும் களைகட்டியுள்ளதால், கடந்த வாரம் செடி முருங்கைக்காய் கிலோ ரூ.38க்கு கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது மர முருங்கைக்காய் கிலோ ரூ.50க்கும், செடி முருங்கைக்காய் கிலோ ரூ.60க்கும் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. வெளிசந்தையில் ஒரு முருங்கைக்காய் ரூ.5 முதல் ரூ.7 வரை விற்பனையாகிறது.

## மரவள்ளி கிழங்கு விலை ரூ.7000 ஆக அதிகரிப்பு



திருப்பூர் : மரவள்ளி கிழங்கு விலை 4 ஆண்டுகளுக்கு பிறகு உயர்ந்துள்ளது. தமிழகத்தின் பல மாவட்டங்களில் மரவள்ளி கிழங்கு பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. ஓராண்டு பயிரான மரவள்ளி கிழங்கின் விலை ஆண்டுக்கு, ஆண்டு குறைந்து வந்தது. இதனால், விவசாயிகள் மரவள்ளி கிழங்கு சாகுபடியை குறைத்து வந்தனர்.

இப்போது, சாகுபடி பரப்பு குறைந்துள்ளதால் மரவள்ளி கிழங்கின் தேவை அதிகரித்துள்ளது. இதனால் ஒரு டன் கிழங்கு, 5 ஆயிரம் முதல் 7 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையாகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: மரவள்ளி கிழங்கு அறுவடை காலம் தொடங்கியுள்ளது. கடந்த 4 ஆண்டுக்கு பிறகு அதிகபட்ச விலையாக ஒரு டன் 5 ஆயிரம் முதல் 7 ஆயிரம் ரூபாய் விலை கிடைத்துள்ளது. கடந்தாண்டு 2,800 ரூபாய்க்கு விற்பனையானது. இதனால், விவசாயிகளுக்கு மிகவும் குறைந்த வருமானம் கிடைத்தது. இப்போது கடந்த ஆண்டை விட டன்னுக்கு 2 ஆயிரம் முதல் 4 ஆயிரம் ரூபாய் வரை கூடுதலாக கிடைக்கிறது என்றார்.

## குன்னூர் ஏலத்தில் தேயிலை தூள் விலை உயர்வு



குன்னூர் : நீலகிரி மாவட்டம், குன்னூர் கூட்டுறவு ஏல மையத்தில் தேயிலை தூள் ஏல விற்பனை நடைபெற்றது. இலை ரகம் 2 லட்சத்து 20,691 கிலோ, டஸ்ட் ரகம் 1 லட்சத்து 84,731 கிலோ என மொத்தம்  4 லட்சத்து 5,422 கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. வெளிநாட்டு வர்த்தகர்களும் அதிகளவில் பங்கேற்றனர். தேயிலை தூள் முழுவதும் விற்பனை ஆனது. அனைத்து ரகத்திற்கும் கிலோ ரூ.3 வரை விலை அதிகரித்தது.

இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ரூ.84 முதல் 90, உயர் வகை 110 முதல் 118, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை 84 முதல் 90, உயர் வகை 95 முதல் 112 வரை விலை கிடைத்தது. சில வாரங்களாகவே இம்மையத்தில் தேயிலை தூள் முழுமையாக விற்பனை ஆகி வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

05th dec 2012 P.M

**கடும் குளிர் எதிரொலி நெற்பயிரில் புகையான் நோய் தாக்குதலில் தப்பிக்க வேளாண்துறையினர் தகவல்**

பழநி,: கடும் குளிர் காரணமாக நெற்பயிரில் ஏற்படும் புகையான் நோயில் இருந்து தப்பிக்க வேளாண்மைத்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.

பழநி பகுதியில் கடந்த மாதம் பெய்த மழையின் காரணமாக விவசாயப்பணிகள் தீவிரமடைந்துள்ளன. இப்பகுதியில் ஏராளமான பரப்பளவில் நெல் சாகுபடி நடந்துள்ளது. கோ 43, திருச்சி 1, ஏ.டி.பி 39 வகை அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளன. தற்போதுள்ள காலகட்டத்தில் போதிய அளவு வெயில் இல்லாமல், வானம் மேக மூட்டத்துடனும், இரவில் கடும் குளிரும் நிலவிவருகிறது. இதன் காரணமாக நெற்பயிரில் பூச்சிநோய் தாக்குதல் ஏற்படும் அபாயம் உண்டாகியுள்ளது. இதிலிருந்து தப்பிக்கும் வழிமுறை குறித்து பழநி வேளாண்மைத்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது கூறியதாவது,

நெற்பயிரில் புகையான் நோய் தாக்குதல் அறிகுறி தென்பட்டால் தழைச்சத்தை பிரித்து குறைத்து இட வேண்டும். வயலில் தேக்கிய நீர் வற்றிய பிறகு மீண்டும் பாய்ச்ச வேண்டும். தேங்கிய நீரை வடிப்பதாக இருந்தால் வேறொரு வயலுக்குச் செல்லாமல் வடிக்க வேண்டும். இந்நோயைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 250 கிராம் அசிடேட் மருந்து தெளிக்க வேண்டும். இம்மருந்தினை மாலை நேரத்தில் தான் தெளிக்க வேண்டும்.

பயிரின் அடிப்பகுதியில் நன்கு படியும்படி இம்மருந்தைத் தெளிப்பது அவசியம். மருந்து தெளிக்கும்

போது வயலில் தண்ணீர் தேங்கியிருக்காமல் பாத்துக்கொள்ள வேண்டியது அவசியம். மேலும் கூடுதலான விபரங்களைப் பெற அருகே உள்ள வேளாண்மை அலுவலகத்தை அணுகலாமென கூறியுள்ளனர்.

**நிலத்தடிநீரை இறைத்து சம்பா பயிரை பாதுகாக்க இலவச டீசல் வேண்டும் தமிழக அரசுக்கு கோரிக்கை**

வலங்கைமான், : வலங்கைமான் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் கருகும் சம்பா பயிரை காக்க விவசாயிகளுக்கு டீசல் இலவசமாக வழங்க வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் சுமார் 20 ஆயிரம் ஏக்கரில் நேரடி விதைப்பு மற்றும் நடவு முறையில் சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன் பெய்த மழையை நம்பி 90 சதவீத நிலப்பரப்பில் சம்பா சாகுபடிக்கான உழவு மற்றும் நடவு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. சம்பா சாகுபடி காலங்களில் பருவமழை 45 தினங்களுக்கு மேல் தொடர்ச்சியாக பெய்வது வழக்கம். தொடர்ந்து பெய்யும் மழையால் சம்பா பயிர்கள் நன்கு வளர்ச்சி அடைந்து பசுமையுடன் காணப்படும். ஆனால் இவ்வாண்டு நடவு பணிகள் முடிவுற்ற நிலையில் மழை பெய்வது நின்றுவிட்டது. மேட்டூரில் இருந்து போதிய அளவு பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படவில்லை. மேலும் கர்நாடக அரசும் தமிழக விவசாயிகளை வஞ்சித்துவிட்டது. இதனால் சாகுபடி செய்யப்பட்ட சம்பா பயிர்களை காக்க மின்மோட்டார்களுக்கு போதிய மும்முனை மின்சாரமும் கிடைக்கவில்லை. மேட்டூரில் தண்ணீர் இல்லை, போதிய மழை இல்லை என்பதால் பயிர்கள் கருக தொடங்கியது. எனவே பயிர்களை காக்க விவசாயிகள் செய்வதறியாது தற்கொலை நோக்கி செல்ல வேண்டிய அவல நிலை உள்ளது. டெல்டா மாவட்டங்களில் சாகுபடி செய்யப்பட்ட சம்பா பயிர்களை முழுமையாக காத்திட மேட்டூரில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட வழியில்லை. எனவே சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பில் 50 சதவீதம் சம்பா பயிரையாவது காத்திட தடையில்லாத மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். நீர் நிலைகளில் தேங்கி உள்ள நீரை ஆயில் இன்ஜின்கள் மூலம் தண்ணீரை இறைப்பதற்கு விவசாயிகளுக்கு டீசல் இலவசமாக வழங்க வேண்டும் என வலங்கைமானை சேர்ந்த விவசாயி சத்தியமூர்த்தி அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

**ஸ்ரீரங்கம் நாட்டு வாய்க்கால் வறண்டது கல்லணை நடுக்கரை பகுதியில் 5,000 ஏக்கர் சம்பா கருகுகிறது**

திருவெறும்பூர், : ஸ்ரீரங் கம் நாட்டு வாய்க்கால் வறண்டதால் கல்லணை நடுகரை பகுதியில் 5,000 ஏக்கர் பரப்பிலான சம்பா பயிர் கருகி வருகிறது. இத னால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

ஸ்ரீரங்கம் தொகுதி கல் லணை நடுகரைப்பகுதியில் கிளிக்கூடு, கவுத்தரசநல் லூர், உத்தமர்சீலீ, பனையபுரம், திருவளர்ச்சோலை, பொண்ணுரங்கபுரம், கொண்டயம்பேட்டை, திருவனைக்காவல், ஸ்ரீரங்கம், மேலூர் உள்ளிட்ட ஊர்கள் அடங்கியுள்ளது. இப்பகுதிக ளில் விவசாயம் பிர தான தொழில்.

இதில் கல்லணை நடு கரை பகுதியில் உள்ள சுமார் 5,000 ஏக்கர் விவசாய நிலங் கள் அனைத்தும் மேலூர் பகுதி காவிரி ஆற் றில் இருந்து பிரியும் ஸ்ரீரங் கம் நாட்டு வாய்க்கால் மூலம் பாசன வசதி பெறுகி றது.

இந்த ஆண்டு போதிய மழை பெய்யாததால் மேட் டூர் அணையில் இருந்து உரிய நேரத்தில் தண்ணீர் திறக்கப்படவில்லை. இத னால் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டது. கடந்த செப்டம்பரில் மேட்டூர் அணை திறக்கப்பட்டு இப்பகுதியில் சம்பா ஒரு போகம் சாகுபடி தொடங்கி யது.

தற்போது மேட்டூர் அணையில் நீர் இருப்பு குறைந்த நிலையில், கர் நாடக அரசு தமிழகத்திற்கு உரிய தண்ணீரை தர மறுத்து வருகிறது. இதற்கிடையே மேட்டூர் அணை யில் இருந்து பாசனத்துக்கான தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டு விட்டதால் தண்ணீரின்றி சம்பா பயிர் காய்ந்து வருகிறது. எனவே விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

திருவளர்ச் சோலை பெண் விவ சாயி இளவ ரசி கூறுகை யில், காவிரி யில் தண்ணீர் இல்லாமல் நட்ட நடவு காய்கிறது. தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக அறிவித்து, பம்ப் செட் மூலம் தண்ணீர் இறைத்து நெற்பயிர்களை காப்பாற்ற மானியத்தில் டீசல் வழங்க வேண்டும். விவசாய கடன் களை தள்ளு படி செய்ய வேண்டும் என் றார்.

**மழை பெய்தால்தான் விவசாயிகளுக்கு பொங்கல் நிலத்தடி நீர் குறைவதா ல் பயிர்கள் கருகும் அபாயம்**

திருப்பூர், : கிணற்று பாசனத்தை நம்பி நெல் மற்றும் மானாவாரி பயிர்களை பயிரிட்டுளள விவசாயிகள் மழை பெய்யாவிட்டால் பயிர்கள் கருகும் அபாயம் உள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர். மழை பெய்தால் தான் இந்தாண்டு விவசாயிகளுக்கு பொங்கல் பண்டிகை சிறக்கும் என கூறுகின்றனர்.

திருப்பூர் மாவட்டத்தில் அமராவதி, பிஏபி, எல்பிபி வாய்க்கால்கள் மூலம் பாசனம் பெரும் ஒன்றியங்களிலும் கூட குறிப்பிட்ட பகுதிகளை தவிர பிற பகுதிகள் நிலத்தடி நீர் ஆதாரத்தை

நம்பியே உள்ளது.  கடந்த மாதம் பெய்த மழையை நம்பி, மாவட்டத்தில் 13 ஒன்றியங்களிலும் உள்ள விவசாயிகள் சுமார் 1,500 ஹெக்டேரில் நெல் பயிரிட்டுள்ளனர். மேலும் சோளம், கம்பு, மக்காச்சோளம், துவரை, பாசிப்பயிறு போன்ற பயிர்கள் 3,000 ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ளன. ஆனால், போதிய அளவு மழை இல்லாததால், குளங்களும் நிரம்பவில்லை. நெல் மற்றும் பயறு, தானியங்கள் பிழைக்க இப்போது மழை பெய்ய வேண்டும். இல்லாத பட்சத்தில், பயிர்கள் கருகும் அபாயம் உள்ளது.   இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், ''மூன்று மணி நேரம் மட்டுமே மின்சாரம் இருப்பதால் கிணற்று நீரை பயன்படுத்தி, வயலுக்கு தண்ணீர் பாய்ச்சி வரும் நிலையில், இப்போது கிணறும் வறண்டு வருகிறது.

இது தொடர்ந்தால், பயிர்களை காக்க முடியாது. மழை இல்லாததால், நெல்லுக்கு பதிலாக விவசாயிகள் பலர் மக்காச்சோளம் பயிரிட்டுள்ளனர். மழை பெய்யாவிட்டால் கூலி கூட தேறாது. மழை பெய்தால் தான் இந்தாண்டு பொங்கல்'' என்கினறனர் விவசாயிகள்.